**செ.வெ.எண்: 04** **நாள்: 02.02.2018**

**புதுக்கோட்டை மாவட்டத்தில் நடைபெற்ற மாற்றத்திறனாளிகளுக்கான சிறப்பு குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் மாற்றுத்திறனாளிகளிடமிருந்து 177 மனுக்கள் பெறப்பட்டு உரிய நடவடிக்கை மேற்கொள்ள அலுவலர்களுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது - மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ் இ.ஆ.ப., அவர்கள் தகவல்**

புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியரக கூட்டரங்கில் மாற்றத்திறனாளிகளுக்கான சிறப்பு குறைதீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (02.02.2018) நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் மாற்றுத்திறனாளிகளிடமிருந்து வருவாய்துறையின் மூலம் வழங்கப்படும் மாற்றுத்திறனாளிகளுக்கான மாதாந்திர உதவித்தொகை கோரி **66** மனுக்களும், இலவச வீடு மற்றும் வீட்டு மனை கோரி **26** மனுக்களும், கடனுதவி கோரி **51** மனுக்களும், பராமரிப்பு உதவித்தொகை கோரி **5** மனுக்களும், உதவி உபகரனங்கள் கோரி **12** மனுக்களும், தாட்கோ உதவிக்கோரி **01** மனுவும், மாவட்ட ஆட்சியர் விருப்புரிமை நிதி கோரி 2 மனுக்களும், காவல்துறை நடவடிக்கைக்கோரி **2** மனுக்களும், MGNREGS கோரி **1** மனுவும் , அரசு வேலை கோரி **7** மனுக்களும் ஆக மொத்தம் **177** மனுக்களை பெற்று உரிய நடவடிக்கை மேற்கொள்ள சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

மேலும் மாற்றுத்திறனாளிகளுக்காக மாநில அளவில் நடைபெற்ற நீச்சல் போட்டியில் வெற்றி பெற்ற புதுக்கோட்டை மாவட்டத்தைச்சார்ந்த திரு.ப.ரமேஷ், திரு.ஜெயக்குமார், திரு.அருண்குமார், திரு.மணிகண்டன், செல்வி.கஜப்பிரியா, செல்வி.ரம்யா, செல்வி,பாண்டியம்மாள், செல்வி.ஈஸ்வரி ஆகியோரை பாராட்டி வாழ்த்து தெரிவித்தார். ஒரு மாற்றுத்திறனாளிக்கு ரூ.5350 மதிப்பில் மடக்கு சக்கர நாற்காலியும், 4 பார்வையற்ற மாற்றுத்திறனாளிகளுக்கு பிரெய்லி வாட்ச், கருப்பு கண்ணாடி, மடக்கு ஊன்று கோல்கள் ரூ.8000 மதிப்பிலும் மற்றும் மாவட்ட தொழல் மையத்தின் மூலம் செய்லபடுத்தப்படும் படித்த வேலையற்ற இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டம்(UYEGP). பாரத பிரதமரின் சுய வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டம் (PMEGP) ஆகிய திட்டங்களில் மாற்றுத்திறனாளிகள் செலுத்த வேண்டிய 5% பங்கு தொகையாக UYEGP திட்டத்தில் 4 நபர்களுக்கு ரூ.28,000 மும், PMEGP திட்டத்தில் ஒரு நபருக்கு ரூ.10000/-மும் ஆக மொத்தம் ரூ.51350 மதிப்பில் பல்வேறு நலதிட்ட உதவிகளையும் வழங்கினார். எனவே தமிழக அரசின் இத்தகைய நலத்திட்ட உதவிகளை பெறும் மாற்றுத்திறனாளிகள் இதனை உரிய முறையில் பெற்று பயன்பெற வேண்டும் என்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ் இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

முன்னதாக இக்கூட்டத்தில் காது கேளாத மற்றும் வாய் பேச இயலாத மாற்றுத்திறனாளிகள் கூட்ட நிகழ்வுகளை புரிந்து கொள்வதற்காக சைகை மொழி பெயர்ப்பாளரை கொண்டு நிகழ்ச்சிகள் மொழி பெயர்ப்பு செய்யப்பட்டது. மேலும் முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீடு, ஆயுள் காப்பீட்டு திட்டம், வேலைவாய்ப்பு துறையின் திட்டங்கள், அம்மா இருசக்கர வாகன திட்டம், வீட்டு வசதி வாரிய திட்டங்கள், தொழுநோய் ஒழிப்பிற்கான விழிப்புனர்வு குறித்தும் சம்பந்தம்பட்ட அலுவலகங்களின் அலுவலர்கள் மூலம் திட்டவிளக்க உரையாற்றப்பட்டது. மேலும் சித்த மருத்துவத்திற்கான சிறப்பு மருத்துவ முகாமில் 43 மாற்றுத்திறனாளிகளுக்கு சித்த மருத்துவ சிகிச்சையும், 200 மாற்றுத்திறனாளிகளுக்கு நில வேம்பு கசாயமும் வழங்கப்பட்டது.

இக்கூட்டத்தல் மாவட்ட வருவாய் அலுவலர் திரு.அ.ராமசாமி, தனித்துனை ஆட்சியர் திரு.செல்வராஜ் ( சமூக பாதுகாப்பு திட்டம்), மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் திரு.பூ.சரவணகுமார், மாவட்ட திட்ட மேலாளர் திரு.சுவாமிநாதன் (முதலமைச்சர் விரிவான மருத்துவக்காப்பீட்டுத் திட்டம்), இளநிலை மறுவாழ்வு அலுவலர் திரு.கோ.வசந்தராமகுமார் மற்றும் அரசு அலுவலர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**